1975 அக்டோபர் 27]

திரு. கே. டி. கே. தங்கமணி : போகஸ் கார்டுகளைப் பயன்படுத்தக்கூடிய வகையிலே 240 கடைகளிலே ஒவ்வொரு கடையிலும் எத்தனை போகஸ் கார்டுகள் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன என்று கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறதா ? அவை பயன்படுத்தப்பட்டிருக்கிறதா ? அல்லது பயன்படுத்தப் படாமல் வைத்திருக்கப்பட்டதா ? இதையெல்லாம் செக் அப் செய்திருக்கிருர்களா ? அப்படி செக் அப் செய்தால் பயன்படுத்தப் படாமல் இருக்கிற கார்டுகளையெல்லாம் வேறு இடங்களுக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்வது பற்றி அரசு யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : போகஸ் கார்டு என்று சொல்கிறபோதே பயன்படுத்தியிருக்கிருர்கள் என்ற நிலைமை தான். ஒவ்வொரு கடையிலும் மொத்தம் இரண்டாயிரத்து சொச்சம் கார்டுகள் என்று இருக்கின்றன. போகஸ் கார்டுகள் ஆள் இல்லாமல் வாங்குவது என்ற முறையிலும் இரண்டு தவணை வாங்குவது என்ற முறையிலும் இருக்கின்றன. சில வியாபாரிகள் ஆர்கனைஸ்டாகச் செய்கிருர்கள். பலபேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சில பேர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழும் கைது செய்யப்பட்டிருக்கிருர்கள்.

* 74 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the average number of family cards allotted to the distributing agencies in Kanyakumari district; and

(*b*) the number of the Co-operative Societies among the distributing agencies?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 929.

(இ) 354.

திரு. என். டென்னிஸ் : சராசரி கணக்கு இவ்விதமாக இருந்தாலும் சில இடங்களிலே 2,500 வரை இருக்கிறது. அதனுல் வீடுகள் பரவலாக இருப்பதால் மூன்று, நான்கு மைல் தூரம் கடந்து சென்று வாங்க வேண்டியிருக்கிறது. விநியோகம் சரியாக இல்லை. இதைத்தவிர ஒரு சொசைடியின்கீழ் சப் டிப்போக்கள் இருக்கின்றன. மார்க்கெட்டிங் சொசைடியின்கீழ் 50 கடைகள் வழங்கி வருகின்றன. அப்படி இருப்பதால் ஒரு மோனுபொலியாக நடக்கிறது. டிஸ்ட்ரிப்யூஷன் ஒழுங்காக இல்லை. இந்த

சொசைடியைத் தவிர பிஷர்மேன் சொசைடி, பாம் கர் சொசைடி இவைகள் இருக்கின்றன, அவைகளுக்கு அதிகாரங்கள் கொடுத்து ஆவன செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கிராமங்களைப் பொறுத்த அளவிலே பல கிராமங்கள் கூட்டுறவு சங்கங்களோடு இணைக்கப் பட்டிருக்கின்றன என்ற பிரச்னையைச் சொல்கிறார்கள், அது நியாயமான பிரச்னைதான். மார்க்கெட்டிங் சொசைடி அல்லது கிரடிட் சொசைடி இவைகளைத் தவிர வேறு சொசைடி அந்தக் கிராமத்திலே இருக்குமானால், அந்த சொசைடியோடு அந்த கிராமத்திலே உள்ள கார்டுகளை இணைக்க வேண்டுமென்ற கோரிக்கை வந்தால் அதைப்பற்றிக் கவனிக்கலாம்.

திரு. ஏ. சுவாமிதாஸ்: ரேஷன் இருக்கிற பகுதிகள் மட்டுமல்ல, ஏனைய பகுதிகளிலும் கார்டுகள் வழங்கப்படுகின்றன. அந்தக் கார்டுகள் எல்லாம் வழங்கப்பட்டு நீண்ட நாளாகிறது. ஆகவே, பழுதடைந்து இருக்கின்றன, அதற்கு மாற்றுக் கார்டுகள் வழங்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கிழிந்த கார்டை மனுவோடு வைத்து அதிகாரிகளிடத்திலே கொடுத்தால் அவர்கள் கொடுப்பார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: இந்தக் கார்டுகளை பல்வேறு சங்கங்களுக்கு ஒதுக்கி, ஒவ்வொரு கிராமத்திற்கும் தக்கபடி விநியோகம், செய்யலாம் என்று கொள்கையளவில் இந்த அரசாங்கம் சில ஆண்டுகளாகவே ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் அது நடைமுறையில் வரவில்லை. இனிமேலாவது காலதாமதமின்றி ஒவ்வொரு கிராமத்திலேயும் இருக்கின்ற கூட்டுறவு சங்கங்கள் மூலமாக அந்தந்த கிராமத்திற்கு விநியோகிக்கின்ற உரிமையை வழங்க அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போது ஒவ்வொரு கூட்டுறவு சங்கத்திற்கும் அப்படி உரிமை வழங்கப்படுகிறது. டென்னிஸ் அவர்கள் கேட்டது மார்க்கெட்டிங் சொசைடி, கிரடிட் சொசைடி இவைகளுக்குத்தான் கொடுக்கிறார்கள், வேறு சொசைடிகளுக்குக் கொடுக்கலாமல்லவா என்று கேட்டார்கள். அது நல்ல யோசனை, அரசாங்கம் பரிசீலிக்கும்.

1975 அக்டோபர் 27]

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: பெல்ட் ஏரியா என்று சொல்லி ஒரு சில விநியோகங்கள் நடைபெற்று வருகின்றன. திரு. டென்னிஸ் கூறியதுமாதிரி மொனொபொலியாக ஒரு சொசைட்டியில் 10, 12 கடைகள் என்ற முறையில் இருக்கின்றன. அதையெல்லாம் மாற்றுவதோடு இப்போது நிலைமை சீரடைந்து இருப்பதால், அளவை ஓரளவு அதிகமாக்கிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தை மாதம்தான் உணவு நிலைமை பற்றி முழுவதும் நாம் நம்பிக்கை தெரிவிக்க முடியும்.

உணவுப்பொருள்களுக்குப் போக்குவரத்து ஏற்பாடு

*வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உணவு தானியப் போக்குவரத்திற்கு ரயில்வே வாகன் பற்றாக்குறையை மத்திய அரசின் கவனத்திற்கு மாநில அரசு கொண்டுவந்ததா?

(இ) ஆமெனில், மத்திய அரசு அளித்துள்ள பதில் பற்றிய விபரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) வாகன்கள் கிடைக்காதது குறித்து முறையீடுகள் வரும்போதெல்லாம் அவற்றை நாம் இந்திய அரசின் நாட்டத்திற்கு கொண்டு வருகிறோம்.

திரு. என். கிட்டப்பா: நம்முடைய தமிழகத்திலே குறிப்பாக உணவுதானியங்கள் ஒரு இடத்திலிருந்து தேவையான மற்ற இடங்களுக்குக் கொண்டு செல்வதற்கு ரயில்வே போக்குவரத்தை நம்பிக்கொண்டிருக்கிறோம், அப்படியில்லாமல் லாரிகள் மூலமாக எல்லாப் போக்குவரத்தையும் செய்யக்கூடிய முறையில் ஏற்பாடு செய்வதன் மூலமாக இதை ஒரு பாலிசியாகவே உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போதே லாரிகள்தான் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன.